தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் நகராட்சிக்கு கலைஞர் மு.கருணாநிதி நூற்றாண்டு நினைவு கட்டிடம் என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். உடன் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தி.பழநிவேல், ச.முரசொலி எம்.பி, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, தாஹீரா அப்துல் கரீம், சண்முக பிரியா செந்தில்குமார், எஸ்.ஆர்.என்.செந்தில்குமார், இராம.குணசேகரன், அஸ்லாம் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சி

மணக்காடு மருத்துவ நலவாழ்வு நிலையம் ஆய்வு!

அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் – மா.சுப்பிரமணியன் மேற்கொண்டனர்!

சென்னை, நவ.20- சேலம் மாநகராட்சி மணக்காடு மருத்துவ நல வாழ்வு நிலையம், குமார சாமிப்பட்டி நகர்ப்புற சமுதாய சுகாதார மையம், குகைபிள்ளையார்கோவில் தெரு நகர்ப்புற நல வாழ்வு மையம், தாதகாப்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளில் திடீர் ஆய்வினை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (18.11.2025) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட மணக்காடு மருத்துவ நலவாழ்வு நிலையம், குமாரசாமிப்பட்டி நகர்ப்புற சமுதாய சுகாதார மையம், குகை பிள்ளையார்கோவில் தெரு நகர்ப்புற நல வாழ்வு மையம், தாதகாப்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அம்மருத்துவமனையில் உள்ள மருத்துவ பயனாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, ஆய்வகம், மருந்தகம், சிறப்பு மருத்துவ பிரிவுகளை ஆய்வு செய்தனர்.

அப்போது மருத்துவ பயனாளர்களிடம் அம்மருத்துவமனையில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்கள். மருத்துவமனைகளில் சிறப்பாக சிகிச்சைகள் வழங்கப்படுவதாக மருத்துவ பயனாளர்கள் தெரிவித்தனர். எனவே மருத்துவமனைகளில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மருத்துவர்கள் செவிலியர்களை அமைச்சர் பெருமக்கள் பாராட்டினார்கள்.

இந்த ஆய்வின்போது சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன், மாநகர நல அலுவலர் மரு.ப.ரா. முரளிசங்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

மயிலாடுதுறையில் 72-வது கூட்டுறவு வார விழா!

6850 பயனாளிகளுக்கு ரூ.51.31 கோடி கடனுதவி! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.,எல்,ஏ, – எம். பன்னீர்செல்வம் எம்,எல்,ஏ, பங்கேற்பு!

மயிலாடுதுறை, நவ. 20– மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் கூட்டுறவுத் துறையின் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 6850 பயனாளிகளுக்கு ரூ.51 கோடியே 31 லட்சம் மதிப்பில் கடனுதவிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் கூட்டுறவுத் துறையின் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை வாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன். சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கமலக்கண்ணன் வரவேற்றான். விழாவில் பிற்பகுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறையின் மூலம் 6850 பயனாளிகளுக்கு பயிர்க்கடன், சுயஉதவிக்குழுக்கடன், கறவை மாட்டு கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், சிறுவணிக கடன், வீட்டு வசதி கடன், மகளிர் தொழிற்கடன் என ரூ.51.31 கோடியே மதிப்பில் கடனுதவிகளை வழங்கியும்

கூட்டுறவு வார விழாவில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டியில் வெற்றி பெற்ற 20 மாணவ, மாணவிகளுக்கு கேடயங்களையும், நற்சான்றிதழ்களையும், 18 சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களையும், சிறந்த நியாயவிலைக்கடையை சேர்ந்த 5 நபர்களுக்கும், தாயுமானவர் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய 5 நபர்கள் ஆகியோர்களுக்கு கேடயங்களையும், குத்தாலம், சீர்காழி, செம்பனார்கோவில் ஆகிய வட்டாரங்களுக்குட்பட்ட 163 ஊராட்சிகளுக்கு தூய்மை பணிகளுக்காக தலா ரூ.2 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பில் மின்கல வாகனங்களையும் வழங்கி பேசுகையில தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின். ஆகியோரின் வழிகாட்டுதலின்பேரில், நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் நவம்பர் 14ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு வார விழாவை தொடங்கி வைத்தார்கள். அந்த அடிப்படையில், மயிலாடுதுறை மாவட்டத்தில் இந்த கூட்டுறவு வார விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக நாம் அனைவரும் கூட்டுறவுத்துறையின் சிறப்புகளை உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளோம். இந்த ஆண்டு முதல் கூட்டுறவுத்துறைக்கான தீம் சாங் கூட்டுறவுத்துறை அமைச்சர் வெளியிடப்பட்டு, இன்று அதற்கான பாடல் வெளியிடப்பட்டு, அதற்கு நாம் உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளோம். அப்படிப்பட்ட இந்த கூட்டுறவுத்துறை விவசாயி களுக்காக, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்காக, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்காக, மாற்றுத்திறனாளிகளுக்காக இப்படி அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படக்கூடிய ஒரு துறையாக கூட்டுறவுத்துறை செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே திருவள்ளூர் மாவட்டத்தில் முதன் முதலாக இந்த கூட்டுறவு சங்கம் தொடங்கப்பட்டது. அதன்பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களில் இந்த கூட்டுறவுத்துறை விரிவடைந்துள்ளது.

அதற்கு, அடித்தளம் எடுத்துக் கொடுத்தது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள். 2006ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன், விவசாயிகளின் கூட்டுறவு கடன் ரத்து செய்யப்படும் என்று கூறி ரூ.7 ஆயிரம் கோடியை ரத்து செய்ததன் காரணமாகவே, இன்றைக்கு இந்த கூட்டுறவுத்துறை உயர்ந்துள்ளது. விவசாயிகள் வாங்கிய கடனை திருப்ப செலுத்த முடியாத நிலையை உணர்ந்து, இந்தியாவில் எந்த முதலமைச்சரும் யோசிக்காத திட்டத்தை குறித்த காலத்தில் அந்த கடனை திருப்பி செலுத்தினால் வட்டி இல்லாமல் கடன் வழங்கியவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையில், தற்போது, நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வேளாண்மைத்துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கையை தந்து விவசாயிகளை பாதுகாத்தவர். அதன் காரணமாக இன்று தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியானது, ஒன்று இந்த கூட்டுறவுத்துறை, மற்றொன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ல் தந்த விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். அன்று 13 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்கள். இன்று 26 இலட்சம் விவசாயிகள் இலவச மின்சாரத்தை பயன்படுத்துகிறார்கள். நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த நான்கரை ஆண்டுகாலங்களில் 1 இலட்சத்து 70 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியுள்ளார்கள்;. இன்று இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களில் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் மேலாக உணவு தானியம் உற்பத்தி செய்கின்ற ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு மட்டுமே.

அதேபோல், விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை இருந்தபோதிலும், நவீன எந்திரமாக்கல் என்ற அடிப்படையில், வேளாண்மைத்துறை மூலமாக உங்களுக்கு தேவையான அந்த இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. அதனடிப்படையில், இன்றைக்கு விவசாயிகள் முன்னேறியுள்ளனர். விவசாயத்தில் உற்பத்தி திறனும் அதிகரித்துள்ளது. 202526 ஆண்டுக்கான கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 1 இலட்சம் கோடி கடனாக வழங்க இலக்கு உள்ளது. அந்த அடிப்படையில், நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் இது வரை இந்த ஆண்டு ரூ 679 கோடி வழங்கி சாதனை செய்துள்ளது. இதன்மூலமாக 1,01,809 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். அதேபோல், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிகள் மட்டுமில்லாமல், நமது தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான கடனுதவி வழங்குகின்ற அந்த துறையை இன்று வெற்றிகரமாக செயல்படுத்தி கடந்தாண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.30 ஆயிரம் கோடி கடன் வழங்கி, சாதித்தவர். நமது கூட்டுறவுத்துறையின் மூலம் 31.10.2025 தேதி வரை 814 மகளிர் குழுக்களுக்கு ரூ.80 கோடி கடன் வழங்கியுள்ளது. கூட்டுறவுத் துறை மூலமாக மாற்றுதிறனாளிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதில் தொடர்ந்து 8 ஆண்டுகளாக இந்தியாவில் முதலிடம் வகித்து வருகிறது.

மாற்றுதிறனாளிகளுக்கு தேவையான விலையில்லா ஸ்கூட்டர் உள்பட, அவர்களுக்கு தேவையான உபகரணங்கள், உதவித்தொகை இப்படி எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மாற்றுத்திறனாளிகள் கடனுதவி கேட்டு, மனு வழங்கியவுடனே, அதனை பரிசீலனை செய்து, உடனடியாக வழங்க வேண்டும். அந்த அடிப்படையில் நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் 31 நபர்களுக்கு ரூ.17.57 லட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த கூட்டுறவு வார விழாவானது, விவசாயிகளுக்கு, பொதுமக்களுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கு பயனுள்ளதாக அமைந்திருக்கின்றது என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ மெய்யநாதன் பேசினார். விழாவில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர். அருள்செல்வம்,மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியான், தலைமை செயற்குழு உறுப்பினர் இராம. இளங்கோவன்.

மாவட்ட கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், மாவட்ட கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர். நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ)என்.செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றிய கழக செயலாளர் என் இனிய பெருமாள் செல்லசேது ரவிக்குமார், ஞான. இமயநாதன், ப.முருகமணி, பஞ்சு.குமார். ஏ ஆர். ராஜா,அமிர்த.விஜயகுமார், கு.வைத்தியநாதன், ஏ.ஜி.ஜே.பிரபாகர், எம்.அப்துல் மாலிக், மூவலூர் எம்.மூர்த்தி, மாவட்ட அறங்காவல் குழு தலைவர் வைத்தீஸ்வரன் கோயில் எஸ்.சுவாமிநாதன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ். நத்தம் ஏ வின்செட்,பேரூர் கழக செயலாளர் எஸ்.கே. முத்துராஜா. அண்ணாதுரை, எம்.அன்புச்செழியன்,மாவட்ட சார்பான அமைப்பாளர்கள் இரா. மனோகரன் வி.எஸ். பிரபாகரன், இரா.முருகன், வெடி எஸ்.பாலமுருகன், தீபாசத்தியேந்திரன்,

சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஷ்வரிராஜசேகர் ஒன்றிய குழு முன்னாள் தலைவர்கள் க.சுரேஷ், தியாக. விஜேஸ்வரன், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் ஆர்.கே.சங்கர், வை தெய்வநாயகம். கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் கீதா மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கூட்டுறவு துறை அதிகாரிகள் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

மறைந்த முன்னாள் திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைச்செல்வம் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ரத்ததான முகாமில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார் தலையமையில் இளைஞரணியினர் ரத்ததானம் வழங்கினர். மாவட்ட செயலாளர்கள் பூண்டி.கே.கலைவாணன், சாக்கோட்டை அன்பழகன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர்கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, தோப்புபாளையம் கொங்கு பொறியியல் கல்லூரி வளாகம் , கொங்கு பல்கலை மையத்தில் கூட்டுறவு துறையின் சார்பில் நடைபெற்ற 70வது அனைத்திந்திய வார விழாவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் கந்தராஜா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

10839 பயனாளிகளுக்கு கடனுதவிகள்!

அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர் நவ.20. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி ராயா மகாலில் 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், சாக்கோட்டை க.அன்பழகன், துணை மேயர்கள் சுப.தமிழழகன் (கும்கோணம், மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரிவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா இன்று நடைபெற்று வருகிறது.

நடப்பு நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 13.11.2025 வரை 34,018 விவசாயிகளுக்கு ரூ.318.87 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் கடந்த ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 33,705 விவசாயிகளுக்கு ரூ.283 கோடி மட்டுமே பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு நிதியாண்டில் 3170 பட்டியலின / பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.27 கோடியும், 2159 புதிய உறுப்பினர்களுக்கு விவசாயிகளுக்கு ரூ.18 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதத்தில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பயிர்க்கடன் குறியீட்டினை எய்திட ஆண்டு இறுதி வரை காத்திராமலும், பயிர்க்கடன் குறியீட்டினை கருத்திற்கொள்ளாமலும் தகுதியான அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு தேவைப்படும் இரசாயன உரங்கள், 238 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. இதில், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பயிர்க்கடனில் பொருட் பகுதியாக உரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், உரங்கள் தேவைப்படும் விவசாயிகளுக்கு ரொக்கத்திற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 15.11.2024 தேதியில் 1647 மெ.டன் யூரியா, 636 மெ.டன் டி.ஏ.பி. 690 மெ.டன் எம்.ஓ.பி. (பொட்டாஷ்) மற்றும் 655 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் ஆகக் கூடுதல் 3629 மெ.டன் உரங்கள் இருப்பில் உள்ளன. ஏழை, எளிய மற்றும் நடுத்தர பிரிவைச் சார்ந்த குடும்பத்தினர்களுக்கு பொது நகைக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் 41,678 பயனாளிகளுக்கு ரூ.128.85 கோடி தள்ளுபடி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. சுயஉதவிக்குழுக்களுக்கு. நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித்தரும் நோக்கத்துடனும், கோவிட் தொற்று நோயால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மகளிருக்கு உதவிடும் பொருட்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் 31.03.2024 வரை நிலுவையில் இருந்த 5116 சுய உதவிக்குழுக்களின் 51,615 உறுப்பினர்களுக்கான கடன் தொகை ரூ.79.65 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பயிர்க்கடன் தள்ளுபடி திட்டம் 2021 கீழ் 41,936 விவசாயிகள் பெற்ற ரூ.477 கோடியே 92 இலட்சம் தொகைக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயிர்க்கடன்கள் தங்குதடையின்றி வழங்கப்படும் எனத் அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 17 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 197 பயனாளிகளுக்கு ரூ.1452.58 இலட்சம் கடனுதவி தொகையும், நாட்டுப்புற கலைஞர் கடன் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.0.50 இலட்சம் கடனுதவி தொகையும், சிறுவணிக கடன் திட்டத்தின் கீழ் 27 பயனாளிகளுக்கு ரூ.13.60 இலட்சம் கடனுதவி தொகையும், டாப்செட்கோ மூலம் 5 பயனாளிக்கு ரூ.23.28 ஆயிரம் கடனுதவி தொகையும், பணிபுரியும் மகளிர் கடனுதவி திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.1.30 இலட்சம் கடனுதவி தொகையும், சிறுகுறு தொழில்கடன் கடன் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.5.00 இலட்சம் கடனுதவி தொகையும், பயிர்கடன் திட்டத்தின் கீழ் 5002 பயனாளிகளுக்கு ரூ.5246.61 இலட்சம் கடனுதவி தொகையும், கால்நடை பராமரிப்புக் கடன் திட்டத்தின் கீழ் 358 பயனாளிகளுக்கு ரூ.161.44 இலட்சம் கடனுதவி தொகையும்,

மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.6.70 ஆயிரம் கடனுதவி தொகையும், மாற்றுத்திறனாளிக் கடன் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.1.23 இலட்சம் கடனுதவி தொகையும், மத்திய காலக் விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.1.43 இலட்சம் கடனுதவி தொகையும், பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.16.80 இலட்சம் கடனுதவி தொகையும், நகை கடன் திட்டத்தின் கீழ் 5099 பயனாளிகளுக்கு ரூ.4147.84 இலட்சம் கடனுதவி தொகையும், வீட்டு கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.18 இலட்சம் கடனுதவி தொகையும், வீட்டு அடமானக் கடன் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சம் கடனுதவி தொகையும், தானிய ஈட்டுக் கடன் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.5 இலட்சம் கடனுதவி தொகையும், டாம்கோ திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.13.35 இலட்சம் கடனுதவி தொகையும்,

தாட்கோ திட்டத்தின் கீழ் 1 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சம் கடனுதவி தொகையும், ஆதரவற்ற விதவை கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.0,75 இலட்சம் கடனுதவி தொகையும், கல்விக் கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.2.30 இலட்சம் கடனுதவி தொகையும், ECS Loan திட்டத்தின் கீழ் 90 பயனாளிகளுக்கு ரூ.844.80 இலட்சம் கடனுதவி தொகையும், இதர கடன்கள் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.52.17 இலட்சம் கடனுதவி தொகையும் என 10839 பயனாளிகளுக்கு ரூ.120 கோடியே 50 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை உயர்கல்வித் துறை அமைச்சர் வழங்கினார்கள்.

தொடர்ந்து, அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற அரசு மாணாக்கர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும், சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு கேடயங்களும் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், சு.முத்துக்குமார், தஞ்சாவூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அ.தயாள விநாயகன் அமுல்ராஜ், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் வெ.பெரியசாமி, பொது விநியோகத்திட்டம், துணைப்பதிவாளர் சுகி. சுவாமிநாதன், தஞ்சாவூர் சரகம், துணைப்பதிவாளர் செல்வி.ஆர்.விநாசாந்தினி, பட்டுக்கோட்டை சரகம், துணைப்பதிவாளர் செல்வி.ஆ.சு.லேகா, கும்பகோணம் துணைப் பதிவாளர் செல்வி.ஆர்.பிரிய தர்ஷினி, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, துணைப்பதிவாளர்/ முதன்மை வருவாய் அலுவலர் க.பாலமுருகன், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, துணைப்பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், தஞ்சாவூர் ஆ.கேத்ரின்,கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி, பொது மேலாளர், ச.இளையராணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி, விளந்தகண்டம் ஊராட்சி, சத்திரம் காலனியில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ 4.95 இலட்சம் மதிப்பீட்டில் சிறு குடிநீர் தொட்டியை மக்கள் பயன்பாட்டிற்கு தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ திறந்து வைத்தார். அருகில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், மு.ஒ.குழு. தலைவர் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி டி.என்.கரிகாலன், மு.மா.குழு.உறுப்பினர் சங்கர், சோழபுரம் பேரூராட்சி செயலாளர் ஐப்ருதீன் துணை செயலாளர் செல்வமணி, குருசுவர் அறிவழகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாமிநாதன், விஜயலட்சுமி, அண்ணலக்ஹாரம் மு.ஊ.ம.தலைவர் விஸ்வநாதன்,நீலமேகம் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.